1031

ARYA DHARMAM REGD. No. M. 2913.
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா ... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ... ரூ. 3
ஆறுமாத சந்தா ... ரூ. $1\frac{1}{2}$
தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ஸு ஆடி-மீ 24உ 1940-ஸு ஆகஸ்டு-மீ 8உ | ஸ-31

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா

குருகுல வைபவம்!! சென்னை ஹிந்து தியாஜிகல் ஹைஸ்கூல் கோல்டன் ஜூபிளி எனும் ஐம்பதாமாண்டு விழாவில் ஸ்ரீஸோமதேவ சர்மா செய்த உபன்யாஸத்தில் பண்டைய முறையில், விக்ஞானம், தாவரம், சரிதம், பூகோளம், கணக்கு, உபநிஷத்து ஆகியவைகள் எங்ஙனம் கற்பிக்கப்பட்டது? என் ஆத்மவித்யைக்கே சிறப்பென வெகு நன்கு விளக்கப்பட்டது. கூடிய வரை பண்டைய வழக்கத்தையும் மதத்தையும் கைகொள்வதிது ஒரே கலாசாலையாம். [illegible] டாடப்பட்டது என்றாலும் அவருக்கேற்ற முறையில் அமரகலாவிலாஸினி ஸபை தவிர மற்றவை கொண்டாடவில்லை. திலகர் வெறும் ராஜ்ய தந்திரி அல்ல! கலாநிதி மதாபிமானி! சுத்த வர்ணாச்ரமி! உத்தம தியாகி! கர்மவீரர்.

ஒரு தார்மிகரை இழந்தோம்!! மைசூர் மஹாராஜா அவர்கள் பரம தார்மிகர்! அநாசாரசட்டங்களுக்கு இடமளிக்காதிருந்தார்! நல்ல தைவபக்தர்!! சிறந்த ராஜ்ய தந்த்ரி! குரு பக்தர்!! இறப்பதற்கேற்ற காலமில்லை! சென்ற வாரம் அவர் நம்மைவிட்டு பிரிந்து விட்டார். இளையராஜா சிறு குழந்தை! இனி தர்மராஜ்யம் எப்படியாமோ?

அடுத்த காங்கிரஸ்

தமிழ் நாட்டில்

காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆஸாத், அடுத்த காங்கிரஸை தமிழ்தேசத்தில் நடத்த வேண்டுமென்று முடிவாக உத்திரவு செய்து விட்டாராம். 13 வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டில் அது நடந்தது. இடம் இனி நிச்சயிக்கப்படும். இப்போதிய பொருளாதார நிலைமையில் தமிழ் தேச வாசிகளுக்கு இந்த யோஜனை பாரமாயிருக்கும்.

ஆடி பூரதத்வம்!! பிரும்ம வித்யா விமர்சினி அங்கத்தினரும் ஸ்ரீ லலிதோபாக்யா நம் திருக்[illegible] முதலிய புத்தக ப்ரசுரதார [illegible] அவர்கள் புரசையிலுள்ள ஸ்ரீ பங்கஜ அம்பாளுக்கு திவ்யாபிஷேக சந்தனகாப்புசாத்தி பிரும்மஸ்ரீ அருட்கவி நா. சுப்ரமண்யயர் தேவி மஹத்வம்! ஸ்ரீ ஸோம தேவ சர்மா பூரதத்வம், ஸ்ரீ சோமசுந்தரய்யர் காமாக்ஷி திருப்புகழ் முதலியவைகளை நடத்திபக்தருக்கு ப்ரஸாதம் வழங்கினர்.

ப்ரபாஸகண்டம்!! பதினெண் புராண ப்ரவசன ஸபையினதரவில் சென்னை ஸ்ரீ சங்கர மடத்தில் நடக்கும் ஸ்காந்தத்தில் நாகர கண்டம் முடிந்து ஏழாவது கண்டமான ஷ கதை ஞாயரன்று ஆரம்பிக்கப்பட்டது.

மைசூர் மஹாராஜா காலமானார்

மைஸூர் மஹாராஜாவுக்கு ஏற்பட்ட ஹிருதய ரோகம் காரணமாக அவர் 3உ யன்று பங்களூரில் இறந்து போனார். அவருக்கு வயது 57 தான் ஆகிறது. மிகுந்த நல்லவர். ஸம்ஸ்கிருதப் பாஷையில் பிரியமுள்ளவர்.

துருக்கியில் மீண்டும் பூகம்ப[illegible]

300 பேர் மரணம்

துருக்கி தேசத்தில் சென்றவாரம், மீண்டும் பூகம்பம் ஏற்பட்டு 300 பேர் மாண்டனராம் ஏற்கனவே சிலமாதங்களுக்கு முன் அங்கு பலத்த பூகம்பம், வெள்ள விபத்து ஆகியவை காரணமாக பல்லாயிரக்கணக்கான துருக்கர்கள் மாண்டு போனார்கள். சொத்துச் சேதத்திற்கு கணக்கில்லை. பல கிராமங்களை அழிந்து போய் விட்டன. இந்த தெய்வ கோபத்திற்கு காரணமென்னவோ?

தஞ்சாவூர் ஜில்லா பாபநாசம் ஸ்ரீ ஸ்ரீனிவாஸ பெருமாள் தேவஸ்தானம்.

1346ம் பசலி வரவு சிலவு ஸ்டேட்மெண்டு.

வரவு விபரம்.

		ரூ. அ. பை.
ஆரம்ப இருப்பு	....	819-11-3
மோஹினி	....	1173-9-4
நஞ்சை ஆதாயம்	....	456-3-0
புஞ்சை ஆதாயம்	....	722-6-6
கடை வாடகை வகையரு	....	271-3-6
சில்லரை ஆதாயங்கள்	....	179-10-7
பத்துவரவு கணக்குகள்	....	164-12-2
		3787-8-4

செலவு விபரம்.

		ரூ. அ. பை.
நித்தியபடி சிலவு	....	295-0-2
உத்ஸவம், ஏறுபடிகள்	....	1347-4-2
சிப்பந்திகள்	....	672-4-4
ரிபேர் சிலவு	....	28-10-9
சில்லரை சிலவு	....	195-9-4
விளக்கு சிலவு	....	381-9-0
கிஸ்தி & வரிகள்	....	447-14-8
கண்ட்ரிபூஷன்	....	57-12-7
பத்துவரவு கணக்கு	....	340-0-0
கையிருப்பு	....	21-7-4
		3787-8-4

Examined and found correct Subject to my audit report

(Sd.) T. S. VISWANATHAN, G.D.A., R.A.,

Regd. Accountant & Auditor, Madras & Kumbakonam.

வாலி வதம்

வாலி ஸ்ரீராமரை நிந்தித்தது

(குலபதி ஸுப்ரமண்ய அய்யர் பி. ஏ.)

(2)

கீழே விழுந்த வாலியைக் கண்டு ஸ்ரீராமர் லக்ஷ்மணருடன் சென்று, அவனைப் பார்த்தார். அவனும் அவர்களை மெள்ள நோக்கி (வீக்ஷமாணம் சனைரிவ), கடுமையான மொழிகளைச் சொன்னான். அம்மொழிகள், "த்வம் நராதிபதே" என்ற ச்லோகம் முதல் "உத்தரம் ஸாது சிந்த்யதாம்" என்றது கடைசியாய் உள்ள ச்லோகங்களுள் அடங்கியுள்ளன. அவைகளின் ஸாரம் பின் வருமாறு:—

(1) நீர் ராஜகுமாரர்; ப்ரதாபமுடையவர்; நல்ல குலத்தில் உதித்தவர்; விரதம் பூண்டுள்ளவர். இப்படியிருக்க, பராங்முகனாக, அதாவது, நீர் இருப்பதைத் தெரிந்துக்கொள்ளாது, இருந்த என்னை பாணம் போட்டு வீழ்த்தியதால் யாதுபயன் அடைந்தீர்? (பராங்முகவதம் க்ருத்வா.) (எ) நான் வேறொருவனுடன் போர் புரிகையில், உமது பாணத்தால் ஏன் என்னை மார்பில் அடித்தீர்? (யதஹம் யுத்த ஸம்ரப்தம்.) (பி) இவ்வுலகில் அனைவரும் உம்மைக் கருணைக் கடல் என்றும், குடிகளுடைய நன்மையில் ச்ரத்தையுள்ளவர் என்றும், ஐம்புலன்களை வென்றவர் என்றும் கொண்டாடுகிறார்கள். தமம், சமம், க்ஷமை, தர்மம், சத்யம், பராக்ரமம், அபராதம் செய்தவர்களை தண்டித்தல், இவை எல்லாம் அரசர்களுக்கு உரிய குணங்கள். நீர் இக்குணங்களை உடையவர் என்று நினைக்க, தாரையால் தடுக்கப்பட்ட போதிலும் [illegible] சயயாமல், சுக்ரீவனோடு போருக்கு வந்தேன். நான் உம்மைப் பார்ப்பதற்கு முன், நான் வேறு ஒருவனுடன் யுத்தம் செய்யும்போது நீர் என்னுடன் போர் புரிய மாட்டீர், என்று எண்ணியிருந்தேன். (நமாம் அந்யேன ஸம்ரப்தம் ப்ரமத்தம் யோத்தும் அர்ஹதி.) (சி) இப்பொழுதோ, நீர் தர்மத்தை நிலை நிறுத்துவதாகப் பாசாங்கு செய்து வீண்கொடிகட்டிக் கொண்டு பாபகார்யங்களைசெய்பவர் என்றும், ஆத்மாவை அழித்தவர் என்றும், (வினிஹதாத்மானம், தர்மத்வஜமதார்மிகம்), பரிசுத்த வேஷத்துடன் கொடுந்தொழில் புரிபவர் என்றும், தெரிந்துகொள்கிறேன்.

(2) நான் உம்முடைய நாட்டிலாவது நகரத்திலாவது ஒரு பாபமும் செய்திலேன். உம்மை அவமதிக்கவும் இல்லை. நான் வேறொருவனுடன் சண்டையிட்டகாலத்தில் ஏன் என்னை அடித்தீர்? ராஜவம்சத்தில் பிறந்து தர்மவான் என்ற பிரஸித்தி பெற்ற நீர் இந்த அழகான ரூபத்துடனும், மஹாக்ரூரஸ்வபாவத்துடனும், ஸாதுக்களுடைய வேஷத்தை தரித்தும், ஏன் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறீர்?

(3) நாங்கள் காட்டில் காய்கனிகளை புசித்து ஸஞ்சரிக்கும் மிருகங்கள். லோகத்தில் விரோதத்துக்குக் காரணம் பொன் வெள்ளி பூமி முதலியவைகள். என்னிடத்தில் எதைக் கண்டு ஆசைப்பட்டீர்? நிக்ரஹம், அனுக்ரஹம் என்னும் ராஜதர்மங்களை அரசன் அனுஷ்டிக்காமல், மனம் போனபடி நடக்கலாமோ? ராஜதர்மத்தை ஒழுங்காய் நடத்தாதவராயும், அதில் விருப்பங்கூட இல்லாதவராயும், இந்த்ரியங்களுக்கு வசப்பட்டு அலைகிறவராயும் இருக்கிறீர். யாதொரு குற்றமும் இல்லாத என்னை ஏன் கொன்றீர்? என்னுடைய, அதாவது, குரங்கு ஜாதியின் மாம்ஸம், தோல், முதலியவைகளை ப்ராமணர்களாவது க்ஷத்ரியர்களாவது தொடவே மாட்டார்கள்.

(4) ஸகலமும் தெரிந்த தாரை கூறிய நன்மைதரும் ஸத்ய மொழிகளை (ஸத்யம் ஸர்வக்ஞயா ஹிதம்) நான் புத்தி மயங்கிப் புறக்கணித்து இங்கு வந்து காலன் வசப்பட்டேன், உயிரை இழந்தேன். என் முன்நின்று சண்டை போட்டிருந்தால் (த்ருச்யமானஸ்து யுத்யேதாமயா) நீர் இதற்குள் என்னால் கொல்லப்பட்டு யமதர்மராஜனை தர்சனம் செய்திருப்பீர் (டி) போரில் ஜயிக்க முடியாத என்னை, குடித்து மயங்கித்தூங்குபவனை பாம்புகடித்தமாதிரி நீர் மறைந்து நின்று கொன்றீர். [த்வயா (அ)த்ருச்யேன து ரணே நிஹதோஹம்] (யி) இவ்விதம் பாப கர்மத்தை ஏன் செய்தீர், என்று பெரியோர்கள் கேட்டால், நீர் என்ன பதில் சொல்வீர் நன்றாய் யோசித்துப் பார்ப்பீராக!

வாலி ஸ்ரீராமர் மீது சாட்டிய குற்றங்கள்:

அக்குற்றங்கள் நான்கு. அவையாவன:—

பராங்முகவதம். வாலி சுக்ரீவனோடு சண்டை போட்டு மெய்மறந்து, ஸ்ரீராமரர் இருப்பதை கவனியாமல் இருந்த போது, அவர்பாணத்தை எய்து வாலியை வீழ்த்தினார். இது முதலாவது தப்பு

வாலி ஸ்ரீ ராமரது நாட்டிலாவது, நகரத்திலாவது யாதொரு தீங்கும் செய்யவில்லை. அவரை ஒரு போதும் அவமதிக்கவும் இல்லை. ஆதலின் அவனைக்கொன்றது அநியாயம். இது இரண்டாவது தப்பு.

வாலி குரங்கு ஜாதியைச்சேர்ந்தவன். குரங்கு ஐந்து நகங்களையுடைய பிராணிகளுள் ஒன்று. ஆயினும் ஐந்து நகங்கள் படைத்த முள்ளம் பன்றி, முயல் முதலான ஜந்துக்களை அரசன் வேட்டையாடிக்கொல்வது தர்ம சாஸ்த்ர ஸம்மதமானது. குரங்கை அவ்விதம் கொல்வது தர்ம சாஸ்த்ரத்துக்கு விரோதம். ஆகையால் அவனைக்கொன்றது அதர்மம் இது மூன்றாவது தப்பு.

இந்த மூன்று தப்புக்களும் தப்புகளே அல்ல என்று செவ்வையாய் நிரூபித்து அழகாய் ஸமாதானம் சொல்லுகிறார் ஸ்ரீராமர். அது அடுத்த கட்டுரையில் விஸ்தரிக்கப்படும்.

மேலே 4ம் பாராவில் சொல்லப்பட்டுள்ள விஷயத்தை கவனிப்போம். அதை ஒரு தனித் தப்பாக நாம் எண்ணவேண்டுமா, வேண்டமா? வேண்டாம் என்று சொல்வதே பொருந்தும். ஏன்? 'வாலிவதம்' என்ற முதல் கட்டுரையில், ஸ்ரீராமர் வாலிக்கு நேரே நின்று தான் பாணத்தைப் போட்டார் என்று விளக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் அவர் மறைந்து நின்று கொன்றார் என்று கொள்வது அஸம்பாவிதம். அப்படியானால் 4-ம் பாரவில் குறிக்கப்பட்ட இரண்டு ச்லோகங்களுக்கும் எவ்விதம் அர்த்தம் சொல்லவேண்டும்? மேலே 1-ம் பாராவில் குறிக்கப்பட்ட 'பராங்முகவதம்', 'யதஹம் யுத்த ஸம்ரப்தம்' 'நமாம் அந்யேந ஸம்ரப்தம் பிரமத்தம்' என்றவைகளுக்கு இணங்கவே, இந்த இரண்டு ச்லோகங்களுக்கு உரை எழுதவேண்டும். 'த்ருச்யமானஸ்து யுத்யேதா' என்றால் 'நீர் என்னால் செவ்வையாக பார்க்கப்பட்டவராய், அதாவது நான் உம்மிடம் பராங்கமுகனாய் இல்லாமலிருந்தால்' என்றும், "த்வயா(அ)த்ருச்யேன துரணே" என்றால் 'யுத்தத்தில் என்னால் செவ்வையாக பார்க்கப்படாமலிருந்த உம்மால்' என்றும் பொருள் சொல்லவேண்டும். இவ்விதம் சொன்னால், இந்த இரண்டு ச்லோகங்களுக்கும் அர்த்தம் பின்வருமாறு:—

த்ருச்யமானஸ்து: 'நீர் என்னால் செவ்வையாய் பார்க்கப்பட்டவராயிருந்து நான் சண்டை போட்டிருந்தால் நான் உம்மை யமலோகத்துக்கு அனுப்பியிருப்பேன்;

த்வயா(அ) த்ருச்யேனது ரணே: "யுத்தத்தில் என்னால் செவ்வையாகப் பார்க்கப் படாமலிந்த உம்மால் நான் கொல்லப் பட்டேன்.

மேலும், த்வயாத்ருச்யேனதுரணே, என்றச்லோகத்துக்கு டீகா சிரோமணியில் வேறு ஒரு அர்த்தம் காணப்படுகிறது. த்வயாத்ருச்யேன, என்றதை த்வயா, அத்ருச்யேன, என்று பிரிக்காமல், த்வயா, த்ருச்யேன என்றே பிரித்து, முழுச்லோகத்துக்கும் பின்வருமாறு அர்த்தம் சொல்லப் பட்டிருக்கிறது: நீர் எனக்கு த்ருஷ்டி கோசரமாகவே இருந்தீர், ஆயினும். குடிமயக்கத்தால் நான் உம்மை செவ்வையாய் கவனிக்கவில்லை. தூங்கும் ஒருவனை பாம்பு கடித்தால் எப்படியோ அப்படி நீர் என்னைக் கொன்றீர்;

'மறைந்து நின்றதை'ப்பற்றி வேறொரு விஷயம்:—

14-ம் ஸர்க்கம் முதல் ச்லோகத்தில், "வ்ருக்ஷைராத்மான மாவ்ருத்ய" என்று இருக்கிறது. இதற்கு 'மரங்களின் பின் மறைந்து' என்று ஸாதாரணமாய் பொருள் கூறப்படுகிறது. டீகாசிரோமணியிலோ, இதே பதங்களுக்கு, மரங்களின் நிழலில் இருந்து' என்று தான் அர்த்தம் என்பதாக ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் ஆலோசிக்குங்கால் ஸ்ரீராமர் மறைவில் நின்றுகொண்டு வாலியை ஸம்ஹாரம் செய்தார், என்று சொல்வதற்கு வால்மீகத்தில் யாதொரு விதமான ஆதாரமும் இல்லை என்றே ஏற்படுகிறது.

இந்தியா மந்திரி கை விரித்து விட்டார்.

காந்தி-வைஸ்ராய் பேச்சு, டெல்லித் தீர்மானம் ஆகியவைகளுக்குப் பிறகு ஏதோ பெரிய ஸம்பவங்கள் ராஜீய நிலைமையில் ஏற்படுமென்று காங்கிரஸ்காரர்களால் எதிர்பார்க்கப்பட்டது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஸம்மதத்துடன் வைஸ்ராய் அறிக்கை வெளிவருமென்று நம்பப்பட்டது.

ஆனால் பார்லிமெண்டில் இந்தியா மந்திரி ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் இந்திய விஷயத்தைப்பற்றிப் புதிதாக அறிக்கையொன்றும் வெளியிடப்படமாட்டாதென்றும் இந்திய ராஜீய நிலைமையில் எவ்வித நெருக்கடியும் ஏற்பட்டிருப்பதாக தாம் நினைக்கவில்லையென்றும் சொல்லிவிட்டார்.

"காங்கிரஸை விட்டு விலகுங்கள்"

காந்திஜீ ஆக்ஞை!

காங்கிரஸானது காந்திஜீயின் அஹிம்ஸையை கைவிட்டு விட்டதால், அஹிம்ஸையில் நம்பிக்கையுள்ளவர் இனி காங்கிரஸைவிட்டு விலகிவிட வேண்டியதே நியாயமென்று காந்திஜீ வெளியிட்டிருக்கிறார். அஹிம்ஸாவாதிகள் காங்கிரஸிலிருப்பதால், அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அடிக்கடி இனி தகராறு ஏற்படுமென்றும் மைனாரிடிகளான அஹிம்ஸா வாதிகள் காங்கிரஸிலிருந்து விலகி நின்று வேலை செய்வதே உசிதமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஸௌந்தரிய லஹரீ

ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகளின் பிரஸங்கம்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் முடிகொண்டானில் 11—7—40-ல் செய்த உபன்யாஸத்தின் ஸாரம்சமாவது:—

प्रदीपज्वालाभिः दिवसकर नीराजनविधिः
सुधासूतेश्चन्द्रोपलजललवैः अर्घ्यरचना ।
स्वकीयैः अम्भोभिः सलिलनिधि सौहित्यकरणं
त्वदीयाभिः वाग्भिः तव जननिवाचां स्तुतिरियं॥

இது ஆதி சங்கர பகவத் பாதாள் ஸாக்ஷாத் ஜகன் மாதாவின் பேரில் செய்தருளிய ஸௌந்தர்ய லஹரியின் கடைசி ச்லோகம். ஹே அக்ஷரஸ்வ ரூபியே! வாக்கை உண்டுபண்ணின ஹே தேவியே! உன்னுடையதான அக்ஷர மாலையாகிற வார்த்தைகளால், அதாவது, இதற்கு முன் செய்துள்ள 99 ச்லோகங்களால் உன்னை ஸ்தோத்திரம் செய்து, அதை உன்னிடமே அர்ப்பணம் செய்கிறேன் என்கிறார். இது இப்படி இருக்கிறதென்றால், அகண்ட தேஜோமயமான சூரிய பகவானுக்கு, உத்தராயணத்தன்று அதின் அம்சமான ஒரு சிறு கற்பூர ஜ்வாலையால் நீராஜனம் செய்விப்பது போலும்; அம்ருத மயமான சந்திரனுக்கு, அதினுடைய கிரணங்களுடைய சதாம்சத்தின் ஸ்பர்சத்தால் சந்திர காந்தக் கல்லில் உண்டாகிற ஜல பெருக்கினின்றும் கிடைத்த ஜலத்தினால் சதுர்த்தி தினத்தன்று அர்க்யம் முதலான உபஹாரம் செய்விப்பது போலும்; ஜலாசயமாகிய ஸமுத்திரத்துக்கு, அதனுடையதான ஜலத்தை எடுத்தோ, அல்லது அதிலிருந்து மேகமாக பரிணமித்து, பிறகு மழையாக ஸ்ரவித்து கீழே விழுந்து தேங்கியிருக்கிறதான ஜலத்தைக் கொண்டோ உபசாரம் முதலியதுகள் செய்விப்பது போலும்; அக்ஷர ரூபியான உனக்கு உன்னுடையதான அருளாகிற அக்ஷர ஸம்யுக்தமான இந்த ஸ்தோத்ரங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டது. இப்படிச் செய்யலாமா என்றால் சாதாரணமாக எல்லாம் ஸ்ரீ பகவானுடையதே. அதை அவரிடம் தானே அர்ப்பணம் செய்கிறோம். அதுபோல அம்பிகையினுடையதான அருளாகிற வாக்கை, அவனிடமே நிவேதனம் பண்ணுகிறது ஸரிதான் என்று படுகிறது.

सरस्वत्या लक्ष्म्या विधिहरि सपत्नो विहरते
रतेः पातिव्रत्यं शिथिलयति रम्येण वपुषा ।
चिरं जीवन्नेव क्षपितपशुपाशव्यतिकरः
परानन्दाभिख्यं रसयति रसं त्वद्भजनवान् ॥

क्षपितपशुपाशव्यतिकरः—

ஹே அம்பிகையே! உன்னை பஜிக்கிறவர்கள் (त्वद्भजनवान्) அறுபட்ட பசு, பாச ஸம்பந்தத்தை உடையவர்களாக ஆய்விடுகிறார்கள். ஈச்வரனுக்கு நாம் பசுப்பிராயம். அதனால் தான் அவருக்கு பசுபதி என்று பெயர் வழங்குகிறது. அவர் நம்மையெல்லாம் தாவணியில் மாடுகளைக் கட்டுவது போல், நம்மை பந்தப்படுத்தி வைத்திருக்கிறார். அந்தக் கட்டைக் கட்டினவராயும், அவிழ்க்கக் கூடியவராயும் அவர் ஒருவர்தான் இருக்கிறார். நாம் கட்டுண்டு போய்விட்டபடியால், கட்டுப்படாமல் மிஞ்சியவரான அவர் ஒருவரால் தான் நம்மை அவிழ்த்துவிட முடியும். நம்மை கட்டினார் என்பதற்கு ஒருவித ஸமாதானம் சொல்லலாம். ஒரு மாடு கட்டுப்படாத போனால், தானாக வெளியில் போய் திரிந்து, பிறருடைய வயலில் மேயப் போகும். இதர மாடுகளும் முட்டும். அப்படிப் போதுமிடத்தில் இதர சொந்தக்காரர்களால் அடி, உதையும் கிடைக்கும். அவர்களுடைய வயலிலும் சேதம் விளையும். அதாவது பிறர்க்கும் இடைஞ்சல். தனக்கும் ஸுகமில்லை. கட்டுப்பட்டு ஒருவனுடைய ஆதரவு அல்லது போஷணையிலிருந்தால், பிறர்க்கும் இடைஞ்சலில்லை, தனக்கும் ஸுகமுண்டு. பிறர்க்கு யாதொரு தீங்கும் விளைவிக்காமலும், தன்னையும் தானே போஷித்துக் கொள்ளத் தெரிந்து விட்டால் அதை கட்டவேண்டியதில்லை அவிழ்த்துவிட வேண்டியது தான். நாம் கட்டுண்டு இருக்கிறோம் என்பதையே சிலர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு விடுதலையாகிய மோக்ஷத்திலும் நம்பிக்கையிராது. ஆனால் நாம் நினைக்கிறபடியெல்லாம் காரியங்களும், எண்ணங்களும் நமக்கு கைகூடி வராமலிருப்பானேன். நமக்கு ஸ்வதந்திரம் இல்லாமை தான் அதற்கு நிதர்சனமான காரணம். நம்முடைய க்ஷேமார்த்தமாகவே நம்மை பந்தத்தில் ஈச்வரன் வைத்திருக்கிறார் என்று ஏற்படுகிறது. நம்முடைய ஆசைக்கோ அளவு கிடையாது. அந்த ஆசை நிறைவேறுங்கால், நமக்கோ, பிறர்க்கோ கஷ்டாயம் உபத்திரவம் விரோதம் இதுகள் ஸம்பவிக்கிறது. இந்த "வேண்டும் வேண்டும்" என்கிற ஆசை அதிகரிப்பதற்குக் காரணம் என்னவென்றால் நாம் நம்முடைய தேகமாகிய இந்த மாம்ஸ பிண்டத்தை நாமாக நினைத்திருக்கிறோம். அதே மாதிரி மற்ற பெரிய, சிறிய ஜந்துக்களும் தன் தன் சரீரத்தையே தான் தானாக நினைக்கின்றன அதாவது மற்ற எல்லாவற்றையும் வேறாகவும், பிள்ளையாகவும், பார்க்கிறோம். அதனால் தான் விரோதம் சண்டை. அப்படி நாம் எல்லாவற்றையும் நாமாகப்பார்த்தால் நம்மைத்தவிர வேறு பதார்த்தமேயில்லாமல் போய்விடுகிறது. ஒன்று மற்றொன்றோடு சண்டை, த்வேஷம் முதலியதுகள் கொள்ள அவகாசமுமிராது;

परानन्दाभिख्यं रसं रसयति "ப்ரும்மானந்தம்" என்று சொல்லப்பட்ட ரஸத்தை ருசிக்கிறான். (त्वद्भजनवान्) நாம் நம்முடைய இந்திரியங்களின் வழியாக நமக்குக் கிடைக்கும் ஆனந்தத்தைத்தான் அனுபவிக்கிறோம். இதைவிட ஷடி இந்திரியங்களின் அபேக்ஷையில்லாமலேயே யாதொரு அடையப் பெருகிற ஆனந்தம் உண்டோ அதைத் தான் "ப்ரும்மானந்தம்" "பரானந்தம்" என்று சொல்லுகிறார்கள். அந்த நிலையைப் பற்றி அதிகம் எழுதவோ, சொல்லவே முடியாது. பெயரைத்தான் குறிப்பிட்டிருக்கிறது. மற்றதை அனுபவத்தில் தான் உணர வேண்டியது.

இப்படி பராசக்தியானவள், பசுவாகிய நமக்கும் பாபமாகிய பந்தத்துக்கும் உள்ள ஸம்பந்தத்தை அறுத்துவிட ஸாமார்த்தியமுள்ளவளாயும், அஞ்ஞான நிவிர்த்தி த்வாரா ஸுகத்தின் பராகாஷ்டையானபரானந்தத்தை கொடுக்கிறவளாயுமிருக்கிறாள். இஹத்தில் வ்யவஹாரதசையில் விஷயங்களில் மூழ்கிக் கொண்டிருக்கிற நமக்கு மோக்ஷம் தருகிறேன் என்றால் தூக்கிவாரிப் போடும். அதற்காக முதலில் ஐஹிகமான ஸரஸ்வதீ கடாக்ஷம், அதாவது நல்ல வாக்கு ஜரி பாண்டித்யம் இதுகளைக் கொடுக்கிறாள். பிறகு லக்ஷ்மீ கடாக்ஷத்தையும் தந்துதவுகிறாள். கேவலம் தனவானாக இருந்து, புத்தி ஹீனனாயிருந்தால், விருதாவாயும், விபரீத பலத்தையும் கொடுக்குமே தவிர ப்ரயோஜனப்படாது என்று முதலில் புத்தியையும் பிறகு ஐச்வர்யத்தையும் கொடுக்கிறான் தைத்திரீயஉபனிஷதில் சொன்னபடி வித்யார்த்தி ततोमेश्रियमावह வித்யாப்யாஸம் பூராவாக ஆன பிறகு எனக்கு ஐச்வர்யத்தைக் கொடு என்றுப்ரார்த்திக்கிறான். அதே போல் நல்ல அழகையும், தீர்க்க ஆயுஸ்ஸையும் விரும்பாதார் இல்லையாகையால் அதையும் தருகிறான்.

இதைத்தான் ஸரஸ்வதீபதியான ப்ரும்மாஎன்ன, லக்ஷ்மீபதியான விஷ்ணுவென்ன இவர்களுக்குப் பொறாமையுண்டாகும், படிக்கும், அபர ஸரஸ்வதீயோ, அபர லக்ஷ்மீயோ என்று சங்கிக்கும் படிக்கும், ரதி தேவிக்கு பாதிவ்ரத்ய நழுவுதல் ஏற்படக்கூடிய மன்மதனை பழிக்குக்கூடிய தேக ஸௌகர்யத்தையும், தன்னை பஜிக்கிறவர்கள் அடைகிறார்கள் என்று உத்ப்ரேக்ஷிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி பரமகருணாரூபிணியான பரதேவதையானவள், தன்னை பஜிக்கிறவர்களுக்கு ஸகலமான ஐஹிகாபீஷ்டங்களையும் தந்து கடைசியில் இவர்கள் வைராக்கிய ஸம்பன்னர்களாகி மோக்ஷத்தை இச்சிக்குங்கால் அதையும் இஜ்ஜீவதசையிலேயே (चिरंजीवन्नेव) கொடுத்து கடாக்ஷிக்கிறாள்.

ஜி. எஸ். வெங்கிடராமய்யர்,
திப்புராஜபுரம்

யுத்த நிதிக்கு உதவக் கூடாதா?

தஞ்சை கௌன்ஸில் விபரீதம்

தஞ்சை முனிஸிபாலிடியில் 31உ யன்று கூட்டத்தில், யுத்த நிதிக்கு ஆயிரம் ரூபாய் உதவி செய்ய வேண்டுமென்று ஒருவர் கொண்டுவந்த தீர்மானத்தைப் பற்றி காங்கிரஸ் கக்ஷி மெம்பர்கள் எதிர்த்தார்கள் முனிஸிபல் நிர்வாஹத்திற்கே பணமில்லையாம். பொது ஜனங்களின் வரிப் பணத்தை ஸம்பந்தமில்லாத விஷயங்களில் விரயமாக்கக்கூடாதாம். இப்படியெல்லாம் காங்கிரஸ்காரர் கக்ஷி பேசி தீர்மானத்தை தோற்கடித்தனர். வட ஆற்காடு ஜில்லா போர்டாரும் இப்படியே செய்தனராம்.

கதர் பிரசாரம், ஹிந்தி பிரசாரம் போன்றவைகள் மட்டும் முனிஸிபல் ஸம்பந்தப்பட்ட விஷயங்கள் போலும்?

எலெக்ஷன் பஹிஷ்காரம்

கராச்சி ஹிந்துக்கள் வெற்றி

கராச்சியில் ஸ்ரீமான் பம்னனி கொலை செய்யப் பட்டதால் காலியாயுள்ள சட்ட ஸபை ஸ்தானத்திற்கு மறு எலெக்ஷன் நடத்துமாறு அந்த கவர்ன்மெண்டார் உத்திரவு செய்தனர்.

ஆனால் ஸ்ரீ பம்னனியைக் கொலை செய்தவர்களைப் பிடித்து சிக்ஷிக்கும் வரையில் ஹிந்துக்கள் இந்த எலெக்ஷனில் ஸம்பந்தப்பட முடியாதெனச் சொல்லிவிட்டனர். ஒருவரும் அபேக்ஷகராக முன் வரவில்லை. கடைசியாக எலெக்ஷன் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-வூ ஆடி-மீ 24உ

ஸம்ஸ்கிருத பாஷையை அழிக்க முயற்சியா?

ஸம்ஸ்கிருத பாஷையின் கௌரவாதிகளைப்பற்றி இன்று நாம் ஒன்றும் புதிதாகப் பெருமை பேச வேண்டிய அவச்யமில்லை. அது தேவ பாஷையாகவும், உலக பாஷையாகவும் விளங்கி கடவுளைப் போல் அழிவற்றதாயிருந்து கொண்டு வருகிறது. கடவுளால், உலகத்திற்கு நன்மையுண்டாமென்று ஒரு மூர்க்கன் விசாரணை செய்வது எவ்வளவு நகைப்பிற்கிடமோ, அது போலவே ஸம்ஸ்கிருதத்தைப்பற்றி விசாரிப்பது மாகும். கடவுளன்றி உலகம் உருப்படியாக நிலைத்திருக்க முடியாதானால் ஸம்ஸ்கிருதமின்றியும் அது உஜ்ஜீவித்து நிற்க முடியாது. ஸகலப்பிராணிகளுடையவும் க்ஷேமத்தை போதிக்கும் நமது வேதங்கள் அந்த பாஷையிலேயே இருக்கின்றன. இன்று எல்லா தேசத்தினராலும் அநுஸரிக்கப்படுகிற சட்டத்திட்டங்களும், ராஜீய அமைப்புகளும் பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன்னேயே இந்த ஸம்ஸ்கிருத பாஷையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. இனிய ரஸங்கள் நிறைந்த காவ்யாதிகளும். இந்தபாஷையில் தான். வைத்யம், சில்பம், போன்ற இன்றியமையாத வித்யைகளும் இந்த தேவபாஷையில் தான். அதிகமேன்? இன்று இவ்வுலகில் விளங்கிவரும், பாஷைகள், நாகரீகம், கலை, ராஜீயம், மதம் போன்ற ஸகல விஷயங்களுக்கும். ஸம்ஸ்கிருத பாஷையே மூலஸ்தானமென்றும், அதிலிருந்துதான் மற்ற யாவற்றும் முளைத்தனவென்றும சொல்லுவதை எவரும் ஆக்ஷேபிக்கமுடியாது. இத்தேசத்திலுள்ள படிப்பாளிகளன்றி வெளிதேசத்திலுள்ள கணக்கற்ற மேதாவிகள் இந்த உண்மையை அறிந்து ஸம்கிருதத்தின் மஹிமையைப்பற்றிப் பேசாத ஸந்தர்ப்பமே கிடையாது.

இவ்வளவு மஹிமை வாய்ந்த இந்த பாஷையை வெளி தேசத்தார் கூட ஆதரித்து அபிவிருத்தி செய்து நன்மை அடைய எவ்வளவோ சிறந்த முயற்சிகள் செய்து வருகையில், இதன் பிறப்பிடமாகிய இப் புண்ய பூமியில் மட்டில் அஸூயை பிடித்த சிலர் இப்பாஷையை த்வேஷித்து இதன் அபிவிருத்திக்கு பஹிரங்கமாயும், மறைமுகமாகவும் இடையூறு செய்து வருவதை பார்க்கிறோம். இதில் மற்ற மாகாணங்களைவிட நமது மாகாணமே முதன்மை ஸ்தானமும் பெற்றிருக்கிறது.

உண்மையை கவனித்தால் தமிழ் தேசத்தில் தான் சைவ, வைஷ்ணவப் பெரியார்கள் பலர் தோன்றி இவ்விரண்டு பாஷைகளுக்கும் பிரிக்க முடியாத ஸம்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆயினும் வகுப்பு த்வேஷ விஷத்திற்கு இரையாகி விட்ட சிலர், அந்த த்வேஷத்திற்கு அங்கமாக ஸம்ஸ்கிருத பாஷா த்வேஷத்தையும் கைகொண்டு அதன் அபிவிருத்திக்கு ஏதாவது இடையூறு செய்து கொண்டு வருகிறார்கள்.

ஸம்ஸ்கிருதத்தின் கௌரவத்தைக் குறைக்க இவர்கள் எவ்வளவோ வேலைகள் செய்தது ஒருபுறமிருக்க ஸமீபத்தில் விசித்திர உத்திரவு ஒன்றை கவர்ன்மெண்ட் மூலம் வெளியிடச் செய்துள்ளார்கள். உத்யோகத்திற்கு ஆள்களைப் பொறுக்க ஏற்பட்ட "பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்" என்ற ஒரு ஸ்தாபனமானது ஷை பரீக்ஷைக்கு வருகிறவர்களுக்கு, மலையாளம், தமிழ் தெலுங்கு முதலிய பாஷைகற்றவர்களே வரக்கூடுமென்றும், ஸம்ஸ்கிருதத்தை உபபாஷையாகக் கற்றவர்கள் அந்த பரீக்ஷைக்குவர அர்ஹதைகிடையாதென்றும் ஓர் உத்திரவு போட்டிருக்கிறார்கள்.

ஸம்ஸ்கிருதத்தை மறை முகமாகத்தாக்கும் விஷமங்களில் இதுவும் ஒன்றென்று சிறு குழந்தைகள்கூட அறிய முடியும். ஸ்கூல்களிலோ, காலேஜிகளிலோ, இனி மாணவர்கள் ஸம்ஸ்கிருதத்தை இரண்டாவது பாஷையாகக் கூடக்கற்க விரும்பாதபடி இந்த உத்திரவு செய்து விடும். வயிற்றுப் பிழைப்புக்காக அலையும் மாணவர்களும், பெற்றோர்களும் அதையல்லவோ பெரிதாக நினைப்பார்கள்? ஆதலால் ஸம்ஸ்கிருதத்தின் வியாபகமானது குறைந்து விடுமென்று அவர்களின் தந்திர யோஜனையாயிருக்கும். இந்த அநீதியை நாம் பலமாக கண்டிக்கிறோம். உலகபாஷையாயும், மஹாமேன்மை பெற்றதாயும், ஸகலச் சிறப்புகளுக்கும் இருப்பிடமாயுமுள்ள ஸம்ஸ்கிருதத்தை இவ்வாறு த்வேஷித்து அழுத்தப் பார்ப்பது மிகவும் கொடுமையான கார்யமாகும்.

ஒட்டகைக்கு மாந்தளிர் பிடிக்கவில்லையானல் அதனல் அந்தத் தளிரின் கௌரவம் குன்றிவிடாது. குமாஸ்தா வேலைக்கோ, அல்லது வேறு ஸர்க்கார் ஊழியத்திற்கோ அடிமைப்பட்டு வயிற்றை வளர்க்க வேண்டிருப்பவர்களாலேயேதான் ஸம்ஸ்கிருதம் அபிவிருத்தியடைய வேண்டு மென்பதில்லை. ஸம்ஸ்கிருதத்தின் கௌரவத்தையோ, உலகமெங்கும் வீசிநிற்கும் அதன் தேஜஸ்ஸையோ இத்தகைய சிறிய விபரீதமுயற்சிகளால் தடுத்துவிட முடியாதாயினும், சென்னையில் நடக்கும். விஷம வேலைகளை விவேகிகள் அறிந்துக்கொள்ள பிரகிருத உத்திரவும் உதவுமென்ற எண்ணத்தாலேயேஇங்கு அதை பிரஸ்தாபித்தோம். இந்த உத்திரவைப்படிப்பாளிகள்யாவரும் ஏகமுகமாகக் கண்டித்து ரத்துசெய்ய முன்வர வேண்டியது அவச்யமாகும்.

—

குறிப்புகள்.

காலஞ்சென்ற மைசூர் மகாராஜா.

பாரத தேசத்தில் மிகச் சிறப்பு வாய்ந்ததும், சரித்திர பிரஸித்தி பெற்றதுமான மைசூர் ராஜ்யத்தின் மஹாராஜா—அவர்கள் காலஞ்சென்ற செய்தியானது பாரத தேச பிரஜைகளனைவரையும் திடுக்கிடச் செய்து விட்டது. அவ்வரசர் பல வழிகளாலும் இந்தியாவிலும், வெளிதேசங்களிலும் மிகப் புகழ் வாய்ந்தவராயிருந்தார். நவீனகால நாகரீக கோலாஹலங்கள் எங்கும் பரவி வருகையில் அவைகளால் ஆக்ரமிக்கப் படாத சுதேச அரசர்கள் யாராவதிருப்பாரானல் அவர் காலஞ்சென்ற அரசரேயாவர் அவர் ஆஸ்திகர், தெய்வபக்தியுள்ளவர். மஹாராஜாக்களுக்கு இயற்கையாய் ஏற்பட்ட அநாவசிய டம்பங்களை வெறுத்து ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்துபவரென்று புகழப்பட்டவர். வீண் ஆடம்பரங்களில் பணத்தை விரயமாக்காதவர். மேற்றிசை அநாகரிகமோஹத்தினல் மயங்கி கணக்கற்ற பணங்களை வீணாக்கி மேற்றிசைகளில் உல்லாஸ பிராயணம் செய்து காலம் கழிக்கும் மன்னர்களும், வெள்ளை ஸ்திரீகளை மணந்து வெறுக்கப்பட்ட மன்னர்களும், மனம் போனபடி யெல்லாம், பிரஜைகளில் மத, ஆசார விஷயங்களில் புகுந்து சட்டதிட்ட பலாத்காரங்களால் நிர்ப்பந்த சீர்திருத்தம் செய்யத்துணிந்து நிற்கும், யதேச்சாதிகாரி அரசர்களும் சிலர் இருப்பதைக் கவனிக்கையில் காலஞ்சென்றமைசூர் மன்னர் எவ்வளவோ விதத்திலும் மஹா ஸாத்விகரென்றும் விவேகியென்றும், வியவஸ்தா வாதியென்றும், தார்மிகரென்றும் சொல்லத் தடையில்லை. ஆலயப்பிரவேச அதர்மத்திற்கு அவர் உடன்பட மறுத்த விஷயம் உலகமறிந்ததேயாகும்.

ராஜீயப் பொருளாதாராதி விஷயங்களிலும் மைஸூர் வெகுதூரம் முன்னேற்றமடையும்படி செய்திருக்கிறார். ஸமீபத்தில் ஜனங்களுக்கு ஜவாப்தாரியான அரசியல் வழங்க அவர் தீவ்ர சிரத்தை எடுத்துக் கொண்டதும் தெரிந்த விஷயம். தவிரவும் அவர் நியாயவழியில் மிக்க உறுதியுள்ளவர். காந்திஜி போன்ற வெளிதேச ராஜீயவாதிகளும், காங்கிரஸ் ஸ்தாபனமும் மைசூரை உருத் தெரியாமல் குலைத்துவிட நினைத்து குருட்டு அதிகாரம் செய்து விஷமம் செய்ததை மஹாராஜா மிக்க அமைதியான நிலைமையில் தைர்யத்துடன் அடக்கி விட்டார்.

அரசர் செய்துள்ள பல்வேறு சிறந்த கார்யங்களையும் வர்ணிப்பது அஸாத்யம். ஹிந்து ஸமூஹ நாகரிகத்திற்கே அவர் பெருத்த ஆதரவாயிருந்தார். அவருடைய அகாலமரணமானது நமது ஸமூஹத்திற்குப் பெரிய நஷ்டமென்பதில் ஸந்தேஹமில்லை.

—

காந்திஜீயின் விநோத வாதம்.

காந்திஜியின் அஹிம்ஸா பல்லவியை இனி திருப்பித்திருப்பிப்பாட காங்கிரஸ் மறுத்துவிட்டதைக் கண்டு அவர் மிகுந்த ஏமாற்றமடைந்து தமது பத்திரிகையில் ஏதேதோ எழுதிய வண்ணமாயிருக்கிறார்.

ஸமீபத்தில் அவர் எழுதியுள்ள ஒரு வியாஸத்தில், அஹிம்ஸையில் நம்பிக்கை உள்ள காங்கிரஸ் வாதிகள், காங்கிரஸிலிருந்து விலகிவிடவேண்டியதுதான் நியாயமென வற்புறுத்தியிருக்கிறார். அஹிம்ஸையில் நம்பிக்கையில்லாதவர்களே காங்கிரஸில் மெஜாரிடியாயிருப்பதால் மைனரிடிகளாயுள்ள

அஹிம்சை வாதிகளின் நிலைமை ஸங்கடமாயிருக்குமென்றும், இரு கக்ஷியாருக்கும் அடிக்கடி சச்சரவு நேரிடுமென்றும், ஆதலால் மைனாரிடியார் காங்கிரஸிலிருந்து விலகிவிடவேண்டுமென்றும் சொல்லுகிறார். அகில இந்தியக் கமிட்டியில் பெருத்த மெஜாரிடி வோட்டுகளால் காந்திஜியின் அஹிம்ஸை நிராகரிக்கப்பட்டிருக்கிறது. அஹிம்ஸா வாதிகள் மைனாரிடிகள் தானே என்று காந்தியும் ஒப்புகிறார். அப்படியானால் சென்ற 20 வருஷகாலமாக காங்கிரஸ்காரர் யாவருமே அபிப்பிராயபேதமின்றி அஹிம்ஸையை ஆதரிப்பதாக வேஷம் போட்டு வந்தது ஏமாற்றுவதற்குத்தானே? உபயோகமற்றதென்று நிச்சயிக்கப்பட்ட ஒரு கொள்கையை 20 வருஷமாக ஆதரிப்பதாக நடித்து தங்களையும் ஏமாற்றிக்கொண்டு காந்திஜியையும் உலகத்தினரையும் ஏமாற்றி வந்தவர்களின் நேர்மையை பற்றி என்னென்று சொல்வது? இதுநிற்க மைனாரிடிகளான அஹிம்ஸாவாதிகளை காங்கிரஸிலிருந்து விலகிவிடும்படி காந்திஜி உபதேசிப்பது நேர்மையா?

இதன் மூலம் அவர் காங்கிரஸை பலஹீனப்படுத்தும் தவறு செய்வதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. மேலும் ஜநாயகத்திற்காக கண்ணீர்விடும் காந்திஜி இப்படிச்சொல்வது ஜனநாயகதத்வத்தையே அழிப்பதாயிருக்கிறது. மெஜாரிடியார் அபிப்ராயத்திற்குக் கட்டுபட்டு மைனாரிடியார் நடக்கவேண்டியதல்லவோ நியாயமானமுறை. மைனாரிடியார் ராஜிநாமா செய்து கொண்டேயிருந்தால் ஜனநாயக ஸ்தாபனங்கள் எப்படி ஒழுங்காக நடைபெற முடியும்? ஆலயப்பிரவேசச்சட்டமியற்றிய ஸமயத்தில், மைனாரிடியார் மெஜாரிடி அபிப்பிராயத்தை மதித்து நடந்து நிறைவேற்றிவைப்பதே நியாயமென்று, காந்திஜி ராஜாஜி, காங்கிரஸ்வாலாக்கள் எல்லோரும் கூச்சலிட்டு நியாயம் ஓதினார்களே? இப்போது காந்திஜி, பேசுவது அதற்கு ஒற்றுமையாயிருக்கிறதா? முன்பின், விருத்தமாயும், தன் ஸௌகர்யத்தை அநுஸரித்தும் தன்னிஷ்டப்படியே பேசுவது தான் காந்தீயத்திற்கு அர்த்தமென்று அந்த அகராதியில் உள்ளது போலும்?

பம்பாய்

மடுங்காவில்வியாஸபூஜை

சாதுர்மாஸ்ய வியாஸ பூஜையானது 21உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீசங்கரமடத்தில் நடந்தது. இதுதான் மட்டுங்காவின் சரித்திரத்திலேயே முதன் முதலாக கொண்டாடப்பட்ட சமயம்.

காலஞ்சென்ற ஸ்ரீச்ருங்கேரி ஜகத்குருவின் பிரதம சிஷ்யரான ஸ்ரீ ஸ்வாமி விமலாநந்த தீர்த்தரால் பூஜைகள் நடத்தப்பட்டன

இந்த பூஜையானது ஒவ்வொரு சன்னியாஸியாலும் எந்த இடத்தில் இருந்தாலும் எப்படி இருந்தாலும் வருஷத்திற்கு ஒரு முறை செய்யப்படவேண்டும். ஆரம்ப தினமுதல் நான்கு மாதங்கள் வரை அவர்கள் ஆரம்பித்த கிராமத்தினுடையவோ, அல்லது நகரத்தினுடையவோ எல்லையை விட்டு செல்லக்கூடாது. அந்த சமயத்தில் அந்த ஸன்னியாஸி எங்கு இருக்கிறாரோ அந்த கிராமத்தினுடையவோ அல்லது டவுனினுடையவோ ஜனங்களுடைய பொறுப்பாகிறது அவர்களை ஆதரிப்பது.

மேலே கண்ட பூஜையானது ஸ்ரீமான் கே. ஆர். அய்யரால் ஸ்ரீமுங்கேகார் எம். ஏ அவர்களுடையவும் பிரபல ஸ்ரீ எஸ். என். காந்தி அவர்களுடையவும் பெருவாரியான உதவியால் நடத்தப்பட்டது.

ஓ. நி.

காந்தி-காங்கிரஸ் பிளவு

உண்மையில்லையா?

காந்திஜிக்கும், காங்கிரஸுக்கும் திட்டமாகப் பிளவு ஏற்பட்டு விட்டதென்பது அவருடைய வியாஸங்களிலிருந்தே வெளியாகிறது. கார்யக் கமிட்டியிலும், அகில இந்தியக் கமிட்டியிலும் பெரும் பாலோராயுள்ளவர்கள் காந்தீய அஹிம்ஸைக்கு எதிராக வோட் கொடுத்திருக்கிறார்கள். இதிலிருந்து அவருடைய கொள்கையை காங்கிரஸ் எதிர்ப்பது தெளிவாகிறது!

ஆயினும், குட்டித் தலைவர்கள் சிலர் இதை மறைக்கப்பாடுபட்டு வருகிறார்கள். காந்தி பிரிந்து விட்டாரென்று தெரிந்தால் காங்கிரஸுக்கு மதிப்புப் போய் விடும். காந்தி பெயரை வைத்துக்கொண்டு பாமரர்களை ஏமாற்றியது இனிபலிக்காது போகும் இந்த கஷ்டம் நேராமல் செய்யவே "காந்தி விலகவில்லை" என்ற பாட்டை ஸி. ஆர். முதலியவர்கள் எங்கும் பாடிவருகிறார்கள்.

காங்கிரஸ் மாளிகைக்கூட்டத்தில் ஸி.ஆர் பேசியபோது காந்திஜி காங்கிரஸை விட்டு விலகவில்லையென்றும், அப்படி நினைப்பது அசட்டுத்தனமென்றும் பேசினார்.

ஆனால் காங்கிரஸ் தலைவரான மௌலானா ஆஸாத் ஒவ்வொரு பேச்சிலும், காந்திஜி காங்கிரஸை விட்டு விலகிவிட்டாரென்பதைத் தெளிவாக ஒப்புக்கொண்டு பேசிவருகிறார். புனாவில் 1-உ யன்று நடந்த திலகர் தினக்கூட்டத்தில் மௌலானா ஆஸாத்பேசியிருப்பதை கவனியுங்கள்:—

> "காங்கிரஸுக்கு ஆலோசனை சொல்லிக்கொடுத்து அதை நடத்திக் செல்லும் பொறுப்பிலிருந்து தம்மை நீக்கிவிடவேண்டு மென்று காந்திஜீ கேட்டார். அவ்வாறு செய்ய நாங்கள் இணங்கினோம்" என்றும் "காந்திஜி காங்கிரஸை விட்டுப்பிரிந்து விட்ட இந்த ஸமயத்தில் தான் நாம் அதிக ஒற்றுமையோடு உழைக்கவேணும்"

என்றும் ஆஸாத் பேசியிருக்கிறார். இதில் காந்திஜி விலகிவிட்ட விஷயத்தை மௌலானா ஸ்பஷ்டமாக ஒப்புக்கொண்டிருக்கிறாரே? இவர் சொல்வது ஸரியா? ஸி. ஆர், சாதிப்பது ஸரியா? காங்கிரஸ் தலைவர் உண்மை நிலைமையைச் சொல்லிவிட்டார். ஆனால் ஸி. ராஜகோபாலாசாரியாரோவென்றால் தமிழ் நாட்டில் காந்திஜி பெயரைக்கொண்டு பாமரரை ஏமாற்றித் தமது ஏகச்க்ராதிபத்யத்தை நிலைநிறுத்த எண்ணியே, காந்தி விலகவில்லையென்று உத்கோஷிக்கிறார்போலும்? காந்திஜியின் கட்டுரைகளைப் படித்தால் அடிப்படையான அபிப்ராயபேதம் காரணமாகத் தாம் காங்கிரஸிலிருந்து விலகிவிட்டதையும் ஒளிமறைவின்றி அவர் வெளியிட்டுவருகிறார்.

மைனாரிடி அஹிம்ஸா வாதிகளை காங்கிரஸிலிருந்து விலகும்படி காந்திஜி சொல்வானேன்? தம்மைப்போலவே அவர்களும் காங்கிரஸிலிருந்து விலகிவிட வேண்டுமென்று அவர் கூறவில்லையா? காபர்கான் கார்யக் கமிட்டியிலிருந்து ஏன் ராஜிநாமா செய்தார்? காங்கிரஸில் காந்தி ஸம்பந்தமிருந்தால் அவர் விலகுவாரோ? ஆகையால் காந்தி விலகவில்லையென்று ஸி. ஆர். சாதிப்பது தந்திரமான பேச்சேயாகும்.

காந்தி-காங்கிரஸ் பிளவானது, தலைவர்களால் ஸங்கேதமாக கற்பித்துக்கொள்ளப்பட்ட ஒரு நாடகந்தானென்றும், பிளவு ஏற்பட்டுவிட்டதுபோல் வெளிக்காட்டி அதிலிருந்து எதிர்காலத்தில் ஏதோ ஸௌகர்யத்தை அடையவே இந்த தந்திரம் செய்யப்படுகிறதாயும் பலர் நினைக்கிறார்கள். இது உண்மையில்லையானால் காந்திஜிக்கும், காங்கிரஸுக்கும் பிளவு ஏற்பட்டிருப்பதை மறைப்பது அஸாத்யமே.

ரயில் விபத்தில்

ஸங்காத மரணம்

வங்காளத்தில் டாக்கா மெயிலானது லயனை விட்டு நழுவி குடை சாய்ந்து விட்டது. இதன் காரணமாக இதுவரையில் 38 பேர்கள் வரை கொல்லப்பட்டுப் போனார்களாம். பலருக்கு பலத்த காயம். ராஜாங்க ஸபை மெம்பரான கனவான் ஒருவரும் கொல்லப்பட்டுப் போனார். இன்னும் மரணத் தொகை நிர்ணயிக்கப்படவில்லையாம்.

மீண்டும் வைஸ்ராய் பேட்டிகள்

ஜனாப் ஜின்னா, டாக்டர் அமபேத்கார், ஹிந்து ஸபைத் தலைவர் ஸ்ரீ ஸவர்க்கார் புலாபாய் தேசாய் ஆகிய பலர் கனம் வைஸ்ராய் அவர்களை பேட்டிக்கண்டு பேச அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேவகோட்டை முனிஸிபாலிடி கலைக்கப்படவேண்டும்

சட்ட விரோதமாயும், பொறுப்பில்லாமலும் நிர்வாஹம் நடத்திய குற்றத்திற்காக தேவகோட்டை முனிஸிபாலிடியை ஏன் கலைத்துவிடக் கூடாதென்று காரணம் கேட்டு சென்னை ஸர்கார் ஓர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்த முனிஸிபாலிடியில் காங்கிரஸ் மெஜாரிடி இருப்பதாக பெருமை பேசப்பட்டதே?

வகுப்புத் தீர்ப்புக்கண்டன தினம்

மாளவியாஜி வேண்டுகோள்

ஸ்ரீமான் மாளவியாஜியும், ஸ்ரீ ஆனேயும் சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டிருப்பதில் வகுப்புத்தீர்ப்பு அநீதியை பலமாகக் கண்டித்து, அதனால்தான் ஹிந்து முஸ்லீம் சச்சரவு அதிகப்பட்டு விட்டதாயும், ஆகவே 17உ யன்று வகுப்புத்தீர்ப்பு கண்டன தினமாக இந்தியா வெங்கும் கொண்டாடவேணு மென்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

தீண்டாதாரும், கிறிஸ்தவ, மஹம்மதியர்களுமே தேவை!

தமிழ்நாடு காங்கிரஸ் கார்யக் கமிட்டிக் கூட்டத்தில் அடுத்த காங்கிரஸை சென்னை மாகாணத்திற்கு அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

காங்கிரசுக்குப் புதிதாக மெம்பர்களைச் சேர்க்கவேண்டுமென்றும், முக்யமாக மற்ற வகுப்பாரைவிட, தீண்டாதார், மஹம்மதியர், கிறிஸ்தவர் முதலிய வகுப்பாரையே அதிகம் மெம்பராகச் சேர்க்க முயற்சி செய்ய வேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டதாம்.

திப்பிராஜபுரம்
ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸபா

சென்ற இரண்டு மாதங்களிலும் நடந்தேறிய உபன்யாஸங்களின் விவரமாவது:—

1—6—40உ சனிக்கிழமை மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் வித்யார்த்தி வெங்கிட்டராமன்—பக்தியும், சாஸ்திரப்படி அதின் ஸ்தானமும், லக்ஷ்யமும்.

8—6—40உ சனிக்கிழமை—புதுக்கோட்டை (அத்வைத ஸபையில் தர்மஞ்ய பரீக்ஷையில் மெடல் பெற்றவர்) ப்ரும்மஸ்ரீ பஞ்சு கனபாடிகள்—தர்ம தத்துவமும் அதின் அனுபவமும்.

ஷை தேதியில் சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ அய்யாதீக்ஷிதர்— ஸ்ரீ ராம ரூபமான தெய்வத்தின் உபாஸனு மஹிமை.

15—6—40உ சனிக்கிழமை—வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள்—"ஸம்ருதே ஸகல கல்யாண பாஜனம்"—விவரணம்.

16—6—40உ ஞாயிற்றுக்கிழமை—ஆங்கரை ப்ரும்மஸ்ரீ ரெங்கஸாமி சாஸ்திரிகள்—ஸ்ரீ பாகவத ரஹஸ்யம்—ஸ்ரீ ருக்மணீ கல்யாணம்.

17—6—40உ திங்கட்கிழமை—விக்கிரபாண்டியம் ப்ரும்மஸ்ரீ கோபால சாஸ்திரிகள்—தத்வ ப்ரகாசமும், ஸ்ரீ கிருஷ்ண பகவானின் லீலையும்.

18—6—40உ செவ்வாய்க்கிழமை—மாயவரம் ப்ரும்மஸ்ரீ ராமனுத சாஸ்திரிகள்—வேதாந்தமும் நவவித பக்தியின் விமர்சனமும்.

ஷை தேதியில் சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ அய்யா தீக்ஷதர்—ஸ்ரீ மீனுக்ஷி கல்யாணம்.

22—6—40உ சனிக்கிழமை—வடகுடி ப்ரும்மஸ்ரீ அய்யா என்கிற வைத்திநாத சாஸ்திரிகள்—"ப்ரும்ம கர்ம ரஹஸ்யம்".

27—6—40உ வியாழக்கிழமை—வாளாடியிலிருக்கும் திருவையாறு ப்ரும்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகள்—சிவோத் கர்ஷம், திருவாரூர் அதிருத்ரம்.

29—6—40உ சனிக்கிழமை—திருவிசநல்லூர் ப்ரும்மஸ்ரீ ரகோஜி சாஸ்திரிகள்—"விவாஹம்".

6—7—40உ சனிக்கிழமை—வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள்—தினவிதி, சந்தியா வந்தனம்.

13-7-40உ சனிக்கிழமை—ஷை—ஷை.

15-7-40உ ஷை ஏகாதசி—ஷை—ஷை.

20—7—40உ சனிக்கிழமை—வடகுடி வைத்தினத சாஸ்திரிகள்—அக்கினி உபாஸனம்—வேதத்தில் ப்ரமாணம்.

27—7—40உ சனிக்கிழமை—ஆடுதுரை பெருமாள் கோவில் ப்ரும்மஸ்ரீ லக்ஷ்மீகாந்த சர்மா—"துருவ சரிதம்".

30—7—40உ செவ்வாய்க்கிழமை—ஏகாதசி—டி. எஸ். வெங்கட்டராமய்யரால்—"மாணிக்கவாசகர்" சரித்திரம்—வாசித்துச் சொல்லப்பட்டது. (ந-நி)

சீர்காழி

ஸ்ரீ சங்கரசரிதோபன்யாசம் 8.வது ஏகாதசி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிற கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் ஆஞ்ஞையை சிரசாவகித்து சந்நிதித்தெருவில் சிட்டர்ட் போஸ்டு மாஸ்டர் ஸ்ரீ டி. கல்யாணராமய்யர் அவர்களது கிரஹத்தில், சீர்காழி கீதோபன்யாசக பிரம்மஸ்ரீ ரா. சுப்பராயய்யரவர்களால் ஒவ்வொரு ஏகாதசியிலும் உபன்யசிக்கப்பட்டுவரும் ஸ்ரீ சங்கரஸத்குரு சரித்திரத்தில், ஸ்ரீ பாலசங்கரர், தனது மாதாவிடம் அநுமதி பெற்று, ஆபத்ஸந்யாசம் பெற்ற அரிய திவ்ய சரித்திர பாகமானது, அனேகம் மேற்கோள்களுடன் வெகு அழகாக கேட்பவர்களின் மனம் பரவசமடையுமாறு, உபந்யசிக்கப்பட்டது.

மறுபடி 13—8—40 (ஆடி-மீ 29-உ) மங்களவாரம் வருகிற 9-வது ஏகாதசியன்று, ஸ்ரீ சங்கரமூர்த்தி கிரமசன்யாசம் பெற நிஜ குருவினை நாடிச்சென்று ஸ்ரீ கோவிந்த பாதாளேயடைந்து அன்னவரிடம், கிரமசன்யாசம் பெற்று, ஆசானது அநுமதியன்படி ஸ்ரீ காசி க்ஷேத்திரமடைந்தார் என்பது வரையிலுள்ள திவ்ய சரித்திர பாகத்தினை உபன்யசிக்கப்படும்.

ஷை இடத்தில் நடந்துவரும் ஸ்ரீமத் பகவத் கீதோபன்யாசத்தில், நாளது 15-வது வாரம் பிரதமஷட்கத்தில் அர்ஜுன விஷாதயோகமெனும் முதாலாவது அத்தியாயம் பூர்த்தியாகி, ஸாங்கியயோகமெனும் இரண்டாவது அத்தியாயத்தில் முதற்சுலோகம் ஆரம்பிக்கப்பெற்றது. ஆஸ்திக பக்த சிகாமணிகளாகிய ஆண் பெனிருபாலரில், அனேகர்கள் வந்திருந்து கேட்டுச்சிரவணனந்தமுற்று, கண்ணனது கருணைக்குப்பாத்திர பூதர்கள் ஆயினர்கள். ஆர் சுப்பராமய்யர்

திருவேடகம்
கண்டனக்கூட்டம்.

19—7—40 ல் திருவேடகம் கிருமத்தி லுள்ள ஸ்தானீய வர்ணாசிரம ஸ்வாராஜ்ய சங்க மெம்பர்களும் பொது ஜனங்களும் உள்பட சுமார் 100 ஜனக்கூட்டத்தில் ஷை சங்கம் அக்கிராசனரின் கீழ் நடந்தது.

ஷை கூட்டத்தில் ஷை யூர் வேதசாஸ்திர பாடசாலை உபாத்தியாயரும் ஷை சங்க காரிய தரிசியுமான கிருஷ்ணசாமி கனபாடிகள்! ஷை யூர் ஷை சங்க மெம்பரும் உபன்யாஸ கருமான நாகேஸ்வர சர்மா இந்த இரண்டு பேர்களாலும் உபன்யாஸம் நடத்தப்பட்டது.

பிறகு அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நம் பரத கண்டத்தில் ராஜாவாயிருக்கக் கூடியவர்கள் விஷ்ணுவினுடைய அம்சாமாகையால் ஷை அம்சத்தையுடைய ராஜா ஈசுவரனுல் இயற்றப்பட்ட சாஸ்திரமாகிய சட்டத்திற்கு விரோதமாய் நடந்தால் ஷை விஷ்ணு அம்சம் விலகிவிடுமாகையால் தர்ம விரோதமான சட்டங்களை ரத்து செய்ய வேணுமாய் மேன்மை தங்கிய ராஜப் பிரதிநிதி அவர்களை இச்சபையானது மன்றாடி பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறது என்றும் மேலும் ஒவ்வொரு மாஸம் பௌர்ணமி தோறும் மீட்டிங் கூட்ட வேண்டியதாயும் தீர்மானிக்கப்பட்டது. பிறகு வந்தனேபசாரத்துடன் சபை இனிது முடிவுற்றது.

ஏ. கிருஷ்ணசாமி கனபாடிகள்,
காரியதரிசி.

[3ம் காலம் தொடர்ச்சி.]

வாஸ்ரமத்தில் இந்த காந்தியாரின் கக்ஷியில் உழைத்து விசுவாசம் கொண்டு அவருக்கு மிந்தகதி வந்துவிட்ட தென்ற துக்கத்தால் தான் இவ்வளவு தூரம் என்னை எழுதும்படி தூண்டிற்று.

மாஜி காங்கிரஸ் வாதி,
ஜி. ஏ. விசுவநாத சாஸ்திரி.

காந்தியாரின் வீழ்ச்சி!

காந்தியை அகில இந்தியக் கமிட்டியார்கள் நீக்கிவிட்டதான தகவல் கிடைத்தது. ஆனல் தற்காலமிருக்கும் காங்கிரஸ் கமிட்டி அவ்விதம் நீக்கிய தென்றுல் ஒருவரும் நம்பமாட்டார்கள். ஆனல் அதையும் நாம் எப்படி தீர்மானிப்பது. அதிகமான பாபபுண்யத்துக்கு பலன்கள் சொல்லுமிடத்தில் மூன்று வருஷம், மூன்று மாதம், மூன்று பக்ஷம் மூன்று தினங்களென்று சாஸ்திரங்கள் முறையிடுவதும் வீண்போகவில்லை, காங்கிரஸ் ஆட்சி ஏற்று நடத்திவந்ததை எவ்வளவு சாச்வதமாய் நினைத்திருந்தார்கள். அவர்களாக விடவேண்டுமென்ற எண்ணந்தானிருந்ததா? மறு எலக்ஷனிலும் தாங்களே ஜெயித்து மந்திரி உத்தியோக மேற்று நாட்டுக்கு குறைவில்லாத தீங்குகள் வைதீக மார்க்கத்திற்கும் செய்து போல்ஷ்விஸத்தை நாஸ்திகத்தை பரப்ப திட்டம் போட்டிருந்தார்கள். அவர்கள் நினைவுகளெல்லாம் கனவாய்முடியவில்லையா? மனிதன் எண்ணுவது போல் எல்லாம் நடக்கிறதில்லையென்பது ஆஸ்திகர்களுக்குத்தெரியும்

ஆசாசம்பத்துடன் கூடிய நாஸ்தீக கூட்டத்தின் அந்த்யகாலம் பிரதானசக்தி பீடமான ஆலாஸ்ய க்ஷேத்திரத்தின் ஆகம சாஸ்திர உல்லங்கனம் அவர்களது விழ்ச்சிக்குகாரணமென்று நாம் சாஸ்திரம் கோஷிப்பதென்று சொன்னல் "மீனுக்ஷி ஆலயம் ஹரிஜனங்களுக்கு திறந்து விட்ட பிறகு தான் மழைபெய்கிறது" "ரெயில் கவுருகிறது" சரோஜனி அம்மாள் மீட்டிங்கென்றுல் மீட்டிங் நடக்க முடியால் மழையால் குளிருகிறது, காங்கிரஸ் பொருட்காட்சி சாலை தீப்பற்றி எரிகிறது, மந்திரி ஸ்தானம் காலியாகிறது. 75ரூ சம்பளம் போகிறது, எங்களது தலைவர்களிடமுள்ள நம்பிக்கை குறைகிறது. என்றெல்லாம் பிதற்றினல் சநாதனிகளாகிய நாமெல்லாம் அழுவதா, சிரிப்பதா?

நேற்றுவரை அநேக மஹா நாடுகள் கூடி காந்தியாரிடம் பரிபூர்ண நம்பிக்கை இருக்கிறதென்று முதல் தீர்மானமாய் போடாத மஹா நாடுகளோ மீட்டிங்குகளோ இல்லையென்று பேப்பர் வாசிப்பவர்கள் தெரிந்து கொண்டிருக்கும் முறையில் காந்தியாரின் தெய்விக சக்தியை பரிபூர்ணமாயறியும் யோக்கியதையை போட்டி பரிசுவைத்து நமது ஏழை இந்திய சகோதரர்களை சுலபமாய் ஏமாற்றி பணம் சம்பாதித்துவரும் விகடபத்திரிகையை காட்டிலும் காந்தியாரின் பெருமையை யாரால் வர்ணிக்கக்கூடும்? அத்துடன் கூட நமது மாஜி பிரதம மந்திரியார் காந்திஜியின் பந்துவும் காரியக்கமிட்டி மெம்பராயுமிருக்கும் அவரும் காரியக் கமிட்டிக்கு போயும்கூட காந்தியாரை நீக்கியதென்றுல் ஆச்சர்யமே. நாமும் நம் புத்தி விசேஷம் கொண்டு காந்தியார் வைசிய ஜாதி சுபாவத்திற்கேற்ற முறையில் தங்கள் கூட்டத்தார்களுக்கு நன்மைசெய்ய மந்திரி ஸ்தானமோ குறைந்த பக்ஷம் 75ரூ சம்பளமாவது கொடுத்து பிரிட்டிஷ் கவர்மெண்டாருடன் சமாதானம் செய்யலாமென்ற ஏமாற்ற நோக்கத்துடன் நடிக்கும் நாடகமென்பதையும் நமது கவர்மெண்டார் தற்காலமுள்ள காந்தியாரின் பேச்சிற்கு செல்லவணி இல்லையென்பதை நன்றுய் தெரிந்துகொண்டு விட்டதையும் மறைக்க முடியுமா? கொஞ்சம் அழகாய் பார்லிமெண்டு முறையை அனுசரித்து தானய் விலகி இருந்தால் இன்னும் மதிப்பாயிருக்காதா யென்ற எண்ணம் மட்டிலும் என்னைவிட்டகலவில்லை. அதுவும் பூர்

[தொடர்ச்சி 2ம் காலம் பார்க்க.]

வாலி வதம்.

(வி. பஞ்சாபகேசய்யர் சேங்காலிபுரம்.)

ஆடி 3உ ஆர்யதர்மத்தில் ஸ்ரீ குலபதி P. A. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் இவ்விஷயமாய் விமர்சனம் எழுதியிருக்கிறார். இப்பிரசினை ராமாயணப்பற்றுள்ள பல ஆஸ்திகர்களையும் சிலசமயம் திண்டாடச்செய்துவிடுகிறபடியால் இதுபற்றி ஆர்யதர்மத்தில் விமர்சனம் செய்ய சந்தர்ப்பமளித்ததற்கு நன்றி செலுத்தவேண்டும். அய்யரவர்கள் கடைசியில் "ஸ்ரீராமர் வாலிக்கு நேரில் நின்றே பாணத்தை விடுத்தார் என்றுதான் நாம் கொள்ளவேண்டும்" என்று முடிவு கட்டியிருக்கிறார். ராமன் வாலியை "ஒளிந்து நின்று அடித்தார்" என்று பச்சையாய் வால்மீகி சொல்லவில்லை. நேருக்கு நேராய் யுத்தம் செய்யாத ஒருவனை அடித்தார் என்பது தான் கேள்வி. அந்த அர்த்தத்தில் தான் "மறைந்து நின்று அடித்தார்" என்று சொல்லப்படுகிறது. அய்யரவர்களின் மேற்கண்ட முடிவு, வாலியின் கேள்வியையும் ஸ்ரீராமனின் பதில்களையுப் கவனித்துப்படிப்பவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்காது. அவைகளை கவனிப்போம்.

வாலியின் கேள்வி

அடிப்பட்டதும் வாலி ராமனைப்பார்த்துப் பேச ஆரம்பிக்கும்போதே

பராங்முகவதம் க்ருத்வாகோ நு ப்ராப்தஸ்த்வயா குண: ।

"நேரில்லாதவனைக் கொன்று உன்னால் என்ன நன்மை யடையப்பட்டது?" என்கிறான்; மத்தியில்

கிம்வக்ஷ்யஸி ஸதாம் மத்யே கர்ம க்ருத்வா ஜுகுப்ஸிதம் ।

"இந்தவெட்கக்கேடானகாரியத்தைச்செய்துவிட்டு நல்லவர்கள் மத்தியில் என்ன சொல்லப்போகிறாய்?" என்கிறான். கடைசியிலும் 'உதாசீனனான என்னிடத்தில் காண்பிவிக்கப்பட்ட உன்னுடைய இந்த பராக்கிரமம் விரோதம் செய்தவர்களிடத்தில் உன்னால் காண்பிவிக்கப்பட்டதாய்த் தெரியவில்லை." "என் கண்ணுக்கெதிரில் நீ யுத்தம் செய்திருந்தாயேயானால் இவ்வளவு நேரம் நீ என்னால் அடிப்பட்டு வைவஸ்வத தேவரைப் பார்த்திருப்பாய். தூங்குகிறவனை பாம்பு கடிப்பது போல், எதிர்க்கமுடியாத என்னை பார்க்கப்படாத சமயத்தில் அடித்துவிட்டாய்" என்று வாலி ராமனுக்கு நேருக்கு நேரே சொல்லுகிறான்.

ராமனின் பதில்

வால்மீகி சொல்லியிருப்பதின் சாரமான பாகங்களின் மொழி பெயர்ப்பை மட்டும் கீழே எழுதுகிறேன். ஸ்ரீராமனின் ஸமாதானம் கீழ்கண்டபடி நாங்கு பாகங்களாயிருக்கின்றன. அவர் சொல்லுவதாவது:—

1 இந்தக் காடுள்பட எல்லா தேசங்கட்கும் அரசன் பரதன். அவனைச் சேர்ந்தவன் நான். தர்ம விருத்தமாய் நடப்பவர்களை சிட்சிக்கவேண்டியது அரசனின் கடமை. உன் தம்பி சுக்ரீவன் உயிருடனிருக்கும் போதே அவன் பத்நியை நீ அனுபவிக்கிறாய். இது பெரிய குற்றம். நல்ல குலத்திலுதித்த க்ஷத்திரியனான எனக்கு இந்த உன் குற்றம் சகிக்கவில்லை. இந்த குற்றத்திற்கு கொலை தான் தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் உனக்கு இந்த சிட்சை விதித்தேன்.

2 தாரம் ராஜ்யம் இவை நிமித்தமாய் நானும் சுக்ரீவனும் சினேகம் செய்து கொண்டோம். வானரர்கள் முன்னிலையில் அவனுக்கு வாக்குறுதியும் செய்துவிட்டேன். அதை நிறைவேற்றவேண்டியது என் கடமை. இவை முதலான பலவித தர்ம ஸம்மந்தமான பெரிய காரணங்களால் உன்னை நான் அடித்தது தர்மத்தை யனுசரித்து சரிதானென்று நீ அனுமதிக்க வேண்டும்.

3 தர்மத்தை மட்டும் சரியாய் அறிந்து கொண்டாயேயானால் நான் செய்த தண்டனையை நீயாகவே பிரார்த்தித்துப் பெற்றுக்கொண்டிருப்பாய். தர்மம் தெரிந்தவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட கீழ் கண்ட இரண்டு ச்லோகங்கள் மனுவால் சொல்லப்பட்டிருகிறது.

ராஜபிர்த்ருததண்டாஸ்து க்ருத்வா பாபாநி மாநவா: । நிர்மலா: ஸ்வர்க்கமாயாந்தி ஸந்த: ஸுக்ருதிநோ யதா ॥

(பொருள்) பாபம் செய்தவர்கள் அரசர்களால் தண்டிக்கப்பட்டால் புண்ணியம் செய்தசாதுக்களைப்போல் அவர்கள் சுவர்க்கத்தை யடைகிறார்கள்.

சாஸநாத்வா விமோக்ஷாத்வா ஸ்தேந: பாபாத்ப்ரமுச்யதே । ராஜாத்வசாஸந் பாபஸ்ய ததவாப்நோதி கில்பிஷம் ॥

(பொருள்) திருடனை அரசன் தண்டித்தாலும் விட்டுவிட்டாலும் திருடன் பாபத்தினின்றும் விடுபடுகிறான். ஆனால் தண்டிக்காமல் விட்டுவிட்ட அரசன் அந்த பாபத்தை யடைந்து விடுகிறான்.

(குறிப்பு) இந்த சுலோகங்கள் மனுஸ்மிருதி 8வது அத்தியாயத்தில் காணப்படுகின்றன. மேலும் 2வது சுலோகம் திருடர்கள் தாங்களாகவே அரசர்களிடம் போய் தண்டிக்கும்படி கேட்டுக்கொள்ளும் பிரகரணத்தை யொட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.)

நீ செய்தது மாதிரி முன் சிரமணனால் குற்றம் செய்யப்பட்டு என் மூதாதையான மாந்தாதா இதேமாதிரி கோரமான தண்டனையை விதித்திருக்கிறார். இன்னும் தெரியாத்தனத்தால் பலர் பாபங்களைச் செய்துவிட்டு பிறகு பிராயச்சித்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் பாபம் போய்விடுகிறது. ஆகையால், ஹே! வானரசிரேஷ்டனே! பரிதாபம் வேண்டாம். உன்னுடைய வதம் தர்மத்தை அனுஸரித்தே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. என் விருப்பப்படி நான் செய்தது இதில் ஒன்றும் இல்லை.

4. இன்னுமொரு காரணம் சொல்லுகிறேன். கேள். அந்தப்பெரிய காரணத்தைக்கேட்டு பிறகு நீ கோபித்துக் கொள்ளமாட்டாய். தர்மமறிந்த அரசர்கள் மறைவாகவோ நேரிலோ, பலவித உபாயங்களால் பயமுறுத்தியோ விசுவாசமுண்டாகும்படிச் செய்தோ மிருகங்களை வேட்டையில் அடிப்பது சகஜம். அதேமாதிரி நான் உன்னை அடித்தேன். நீ எதிர்த்து சண்டை யிட்டால்தானென்ன, சண்டையிடாவிட்டால்தானென்ன! நீ ஒரு சாகா மிருகந்தானே!

(இந்நான்கு காரணங்களையும் சொல்லிவிட்டு கடைசியில் சொல்கிறார்)

இகபரங்களை ரட்சித்துக் கொடுப்பவர்கள் அரசர்கள். அவர்களை ஹிம்சிக்கவாவது நிந்திக்கவாவது, அவமானிக்கவாவது, எதிர்வார்த்தை யாடவாவது கூடாது. அரசர்கள் மனிதரூபத்துடன் உலகில் சஞ்சரிக்கும் தேவர்கள். நீ தர்மத்தை யறிந்து கொள்ளாமல் கோபத்தை மாத்திரமடைந்து, முன்னோர்களின் தர்ம வழியை பின்பற்றி நடக்கும் என்னை தூஷிக்கிறாய்.

இம்மாதிரி ராகவன் சொல்லி முடிந்ததும் வாலி தான் பேசியதற்கு வருந்தி தர்மத்தில் நிச்சயபுத்தியடைந்து ராகவனிடத்தில் தோஷத்தையே நினைக்கவில்லையென்று முடித்திருக்கிறார் வால்மீகி பகவான்.

இதனால் விளங்குவது என்ன?

வாலியால் சாட்டப்பட்ட "நேரில்லாமல் அடித்த" குற்றத்தை ராகவன் மறுதளிக்கவில்லை. அதை ஒப்புக் கொண்டே சமாதானங்கள் செல்லியிருக்கிறார். அவர் மேலுக்கு மேல் சமாதானங்கள் சொல்லியிருப்பதை கவனிப்பவர்களுக்கு "நான் செய்த பிசகு சட்டப்படி குற்றமாகாது" என்பதுபோல் அவர் ருசுப்பிக்க பிரயாசைப்படுவது விளங்கும். அவர் சொன்ன நான்கு சமாதானங்களிலும் அடிக்கடி தர்மம் தர்மம் என்று முறையிடுகிறார். கணக்கிட்டால் 25 தடவை தர்ம சப்தத்தை உபயோகித்திருக்கிறார். வாலி தன்னிடம் அதிருப்திப்படாமல் தான் செய்த காரியத்தை அனுமதிக்க வேணுமாய் கோருகிறார். இவைகளை யெல்லாம் சேர்த்து நடு நிலைமையாய் கவனித்துப் பார்ப்பதிலிருந்து ஏற்படக்கூடிய முடிவு ஒன்றுதான் அதாவது:—

"நான் செய்தது சாதாரணப் பார்வைக்கு பிசகாகத் தோன்றிய போதிலும் தர்ம ரீதியாய் அது பிசகில்லை. தர்மத்தை ரட்சிக்க வேண்டிய பெரிய காரியத்துக்காக இப்படி உன்னைக் கொல்லவேண்டியது அவசியமாகிவிட்டது என்பதுதான்"

இதைத்தான் ராகவன் விவரமாகச் சொல்கிறாரென்பது விளங்குகிறது.

வாலியிருந்தால் தர்மத்துக்கு என்ன கெடுதல்?

என்று மேலே ஒரு கேள்வி பிறக்கலாம். அதில் தான் தர்ம சூட்சுமம் இருக்கிறது. ராமன் இப்பூமியில் உதித்தது அதர்மத்தைத் தொலைத்து தர்மத்தை ரட்சிப்பதற்காக. சரபங்கர் ஆசிரமத்தில் மகர்ஷிகளின் வேண்டுகோளுக்கிணங்கி ராட்சதர்களைக் கொன்று தர்மத்தை ரட்சித்துக் கொடுப்பதாக ராகவன் பிரதிஞ்யை செய்து கொடுத்திருப்பது இங்கு கவனிக்கத் தக்கது. ராவணன் தபோபலத்தால் தான் பெற்றிருக்கும் வரன்களை துர் உபயோகப்படுத்தி பொதுவாய் தர்மங்களுக்கும் மகர்ஷிகளுக்கும் எப்போதும் இடைஞ்சல் செய்து கொண்டேயிருக்கிறான். வாலியும் ராவணனும் ஒருவர் சுகதுக்கங்களுக்கு மற்றவர் கட்டுப்படுவதாக

(8-ம் பக்கம் பார்க்க.)

வாலி வதம்

(7ம் பக்கம் தொடர்ச்சி)

அக்கினி சாட்சியத்தில் ஒரு சினேக உடன் படிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள். இது உத்தரகாண்டம் 34-வது சர்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி ராம ராவண யுத்தத்தில் வாலி உயிருடன் இருந்தால், ராவணனோடு சேரும்படி நேரும். வாலி நேரில் நின்று யுத்தம் செய்தால் ஜயம் கிடைப்பது சந்தேகம். தேவேந்திரனால் வாலிக்கு யுத்தத்தில் ஜயத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு காஞ்சனமாலை கொடுக்கப்பட்டிருப்பதும் அதை அவன் யுத்தத்துக்குப் போகும் போதெல்லாம் தரித்துக்கொண்டு போவதும் கிஷ்கிந்தாகாண்டம் 11, 17, 22 சர்க்கங்களிலிருந்து தெரிகிறது. ஆகையால் உலகத்தில் அதர்மத்தைத் தொலைத்து தர்மத்தை ரட்சிக்க வேண்டிய ஒரு பெரிய காரியத்துக்காக வாலியைக் கொல்லவேண்டியது அவசியமாகிவிட்டது. தன் சினேகிதனான சுக்ரீவனிடம் வாலி தர்ம விருத்தமாய் நடந்து கொண்ட குற்றத்தைச் சாக்கிட்டு சரியான சந்தர்ப்பத்தில் அவனைக் கொன்றார். பெரிய நன்மைக்காக ஒரு சிறிய பிசகைச் செய்யலா மென்பது தர்ம சாஸ்திர சம்மதம். தர்மத்தை ரட்சிக்கும் நோக்கமல்லாது கேவலம் சொந்தக் காரியத்துக்காக ராமன் இக்காரியத்தைச் செய்திருந்தால் அதுவே தர்ம விருத்தமாயாகலாம். ராகவன் வாலிக்குச் சொல்லும் முதலாவது சமாதானத்திலேயே

ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ப்லவங்கம।
ஹ்ருதிஸ்த: ஸர்வபூதாநாமாத்மா வேத ஶுபாஶுபம்॥

"ஸாதுக்களின் தர்மம் மிகவும் சூட்சுமமானது. மிகவும் அறியமுடியாதது. சகலப் பிராணிகளுடையவும் ஹிருதயத்திலுள்ள அந்தராத்மா தான் அதன் நல்லது கெட்டதுகளை அறியமுடியும்" என்றும், மூன்றுவது சமாதானத்தின் கடைசியில்,

நாஹம் து வஶகஸ்ஸ்வைரீ॥

"நான் என் இஷ்டப்படி நடப்பதற்கில்லை" என்றும் சொல்லுகிறார். தர்மத்துக்கு தயவு தாட்சண்ணியமும் உசிதம் அனுசிதம் என்பதும் கிடையாது. தர்மரட்சணத்தை கடமையாகக் கொண்டவர்கள் அதன்படியே தான் நடக்கவேண்டும். இதையேதான் மகர்ஷி விசுவாமித்திரர் தாடகாவதத்தின் போது ஸ்ரீராகவனுக்கு கீழ்கண்டபடி உபதேசிக்கிறார்.

ந்ருஶம்ஸமந்ருஶம்ஸம் வா ப்ரஜாரக்ஷண காரணாத்।
பாதகம் வா ஸதோஷம் வா கர்தவ்யம் ரக்ஷதா ஸதா॥

"பிரஜைகளை ரட்சிக்க வேண்டு மென்றால் கடூரமானதோ, முழுப்பிசகோ, அல்லது தோஷம் கலந்ததோ, எந்தக் காரியத்தையும் செய்யத்தான் வேண்டும் என்பது இதன் பொருள்."

அடுத்தமுறை, வால்மீகி பகவான் தர்ம சாஸ்திரத்தைத்தான் காவியநடையில் ராமாயணமாக எழுதினர் என்பதை நிரூபிக்க விரும்புகிறேன்.

மேல்மங்கலம்

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

விக்ரம-ஸு ஆடி-மீ 17உ மாலை 4½ மணிக்கு ம. விஸ்வநாதய்யரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் சபை கூடிற்று. இவ்வருஷத்தின் சபை நிர்வாஹஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். ஸ்ரீம. விஸ்வநாதய்யரவர்கள் அத்யக்ஷராகவும் ஸ்ரீ பஞ்சநதி சிவராமய்யரவர்கள் உப அத்யக்ஷராகவும் ஸ்ரீ சிவராம கணபதி கனபாடிகள் அவர்கள் காரியதரிசியாகவும் ஸ்ரீ சு. சுப்பராஜ சாஸ்திரிகளவர்கள் உப காரியதரிசியாகவும் சுப்பிரமணிய அய்யரவர்கள் பொக்கிஷதாராகவும், மற்றும் 10 கமிட்டி மெம்பர்களும் சபையோரால் தெரிந்தெடுக்கப் பெற்றார்கள். காரியதரிசியால் சபையின் மூன்றாவது வார்ஷிகோத்ஸவச் சிலவு விபரம் தெரிவிக்கப்பெற்று சபையோரால் அங்கீகரிக்கப் பெற்றும் ஸ்ரீ எம். எஸ் சுந்தரேசய்யரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்றும் சபை மாலை 6மணிக்கு இனிது நிறைவெய்தியது.

காரியதரிசி.

இராமேச்வரம்.

5-வது ஏகாதசி விழா

30—7—40உ இன்று இரவு 8 மணிக்கு சங்க காரியாலயத்தில் பி. மகாதேவ சாஸ்திரியார் அவர்கள் தலைமையின் கீழ் 5-வது மகத்தான ஏகாதசி விழா ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் முன்னுரையில் மதத்தை பாதுகாப்பதற்கு மதக் கல்வி தான் என்றும் ஆகையால் எல்லோரும் வேதத்தை அப்யாஸம் செய்ய வேண்டுமென்றும் பிராமஹண சிறுவர்கள் முக்கியமாக இதைக் கவனிக்க வேண்டுமென்றும் கூறிய பின்.

பிள்ளையார் பட்டியிலிருந்து வந்திருக்கும் பிரம்மஸ்ரீ எஸ். எஸ். மணி அய்யர் அவர்களால் ஸ்ரீ கணேச உபாக்யானம் என்னும் சரித்திரத்தை கேட்போர் மனது உருகும்படியாக வெகு அழகாகவும் உருக்கமாகவும் உபன்யசிக்கப்பட்டது. பிறகு சங்கத் தலைவர் மு. வ. கோபால சாஸ்திரியள் அவர்களால் சங்கத்தின் கொள்கைகளையும் சட்டங்களையும் எடுத்து கூறப்பட்டது. பிறகு அக்ராசனர் அவர்களால் முடிவுரை கூறப்பட்டு வாழ்த்து கீதம் பாடி பின் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

சங்கர சாஸ்திரிகள்,
காரியதரிசி.

விருத்தாசலம்

ஓர் சந்தேகம்

நாளது விக்கிரம-ஸு ஆடி-மீ 25-உ ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் உற்சவம் (திருநக்ஷத்திரம், சுவாதி) என எல்லா பஞ்சாங்கங்களிலும் போடப்பட்டிருக்கிறது. விருத்தாசலம் க்ஷேத்திரத்தில் ஷை உற்சவம் 26-உ என ஷை தேவஸ்தானம சிவாசார்யர்கள் என, பத்திரிக்கை பிரசுரமாயிருக்கிறது. இதில் ஷை-ஸு ஷை-மீ 25உ பகல் 23 42க்கு மேல் சுவாதி நக்ஷத்திரம் வருகிறது. மருதினம் மாகிய 26-உ சனிக்கிழமை பகல் சுவாதி 20, 1 வரையில் இருக்கிறது. இதில் முதல்நாள் உற்சவம் நடத்தவேணுமா? அல்லது மருதினம் நடத்தவேணுமா? தவிர இந்த உற்சவத்தில் ஸ்ரீ பிக்ஷாண்டவ மூர்த்தியும் எழுந்தருள செய்கிறார்கள் அது நடத்தவேண்டியது. அவசியம் தானா?

(ந. நி.)

தார்மிகயுவர் சங்கம் மதுரை

28—7—40உ ஞாயிற்றுக்கிழமை மதுரை ஸனாதநதர்ம வித்தியாலயத்தில் தார்மிக யுவக் சங்க கூட்டம் ஸ்ரீமான் திருப்புகழ் எம். செல்லயாபிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் 4 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது செல்லயாபிள்ளை அவர்கள் தலைமை வகித்து பேசினார்.

முக்கிய விஷயங்கள் ஆறு பேசினதாவது தெய்வ நம்பிக்கையும் புராதன பழக்கவழக்கங்களும் தார்மிகயுவக்சங்கத்தின் கட்டுப்பாடும் ஒழுங்கும். சினிமா காப்பிகிளப் விலக்குதல், விஷம பிரசாரத்தை கேட்காதிருத்தல், நமது தலைவர் அவர்களை நடக்கும் காரியங்களுக்கும் பின் நடக்கும் காரியங்களுக்கும் அடிக்கடி சந்தித்து விஷயத்தை தெரிந்து அவர்கள் உத்திரவை பெற்றுக் கொண்டு காரியத்தை நடத்தல் ஒவ்வொரு தார்மிக இளைஞர்களும் சனாதன தர்ம பிரசாரம் செய்து ஜனங்களை ஊக்கப்படுத்தி மகிழ்வித்தல் என்பவைகளை பேசியபின் காரியதரிசி S சுப்பிரமணியன் சங்கத்தின் நோக்கங்களையும் அடிப்படையான திட்டங்களையும் குறித்து விரிவாக பேசி காரியதரிசி எஸ். சுப்பிரமணியனால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் ஜெய கோஷத்துடன் கலைந்தது.

காரியதரிசி.
எஸ். சுப்பிரமணியன்

ஸ்ரீ சங்கர குருகுலம்

ஸ்ரீ ரங்கம்

ஸ்ரீ ரங்கம் புது அக்ரஹாரத்தில் ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் ஆலயத்தில் வியாஸ பௌர்ணிமையன்று ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகஸ்ரீ ஸ்ரீ ஸச்சிதானந்த தீர்த்தஸ்வாமிகள் வியாஸ பூஜையையும் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தையும் நடத்தினார்கள் அந்த சமயம் உள்ளூரிலிருந்தும் திருச்சியிலிருந்தும் கிருஷ்ணராஜ புரத்திலிருந்தும் மஹாதானபுரத்திலிருந்தும் மஹாராஜ புரத்திலிருந்தும் அநேக பக்தர்கள் வந்திருந்தார்கள் மத்யானம் பூஜை முடிந்ததும் பிருமணஸந்தர்ப்பணம் நடை பெற்றது. ராத்திரி புனப் பூஜைக்கு பிறகு கொடு முடி பிர்மஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யாளுடைய சரித்திரத்தை அழகாக உபந்யஸித்தார்கள். பிறகு பிரஸங்கபானு சேங்காலிபுரம் பிர்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் அவர்கள் வியாஸ பூஜை செய்ய வேண்டிய ஆவச்ய கதையையும் அதன் காரணங்களையும், வியாஸாசார்யாளின் ப்ரபாவத்தையும் தகுந்த மேற்கோள்களுடன் எடுத்துரைத்தார்கள். பிறகு குரு பக்த சிகாமணி பிரமஸ்ரீ டி. கே. பாலசுப்ரமண்யய்யர் அவர்கள் பேசினார்.

வெங்கடராம சாஸ்திரி
ஸ்ரீரங்கம்

அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்

திருப்புகழ் பாராயண திருமுறை	1	4	0
நால்வர் சரித்திரம் காலிகோ	0	12	0
,, ,, ராப்பர்	0	10	0
பாரதசாரம்	1	2	0
ஸ்ரீ ராமாயண வினாவிடை	1	8	0

கிடைக்குமிடம் ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S, Kalyanasundaram,